5

# நீதிமானும் துன்புற வேண்டுமா?

## (3:1-21)

*நீங்கள் எப்போதாவது, மற்றொருவர் தவறு செய்தபடியினால் துன்புற்று இருக்கின்றீர்களா? அப்படியென்றால், நீங்கள் எரேமியாவின் பெரும் ஏக்கத்தை அடையாளப்படுத்த முடியும். அவர் தாமே தேவனுக்கு உண்மையற்றவராக இராதிருந்தும், உண்மையற்ற நாட்டின் ஒரு பகுதியாக அந்நாட்டின்மீது தேவன் கொண்டுவந்த நியாயத்தீர்ப்பினால் துன்புற்றார்.*

*துன்புற்றுக்கொண்டிருக்கும் ஒன்றுமறியாத மக்களைப் பற்றிச் செய்தித்தாள்கள் நாள்தோறும் கூறுகின்றன. ஒருவர் குடிபோதையில் காரை ஓட்டிச் சென்றதினிமித்தமாகக் குழந்தையொன்று கார்விபத்தில் கொல்லப் பட்டது. மழலையர் பள்ளியில் படித்த பிள்ளைகள் கோபம் கொண்ட துப்பாக்கிக்காரன் ஒருவனால் கடத்திச்செல்லப்பட்டனர். பத்து மாதங்களே ஆன இரட்டைப்பையன்கள் தங்களின் தாயினுடைய ஆண் சிநேகிதனால் அடிக்கப்பட்டனர். இன்னொருவரைக் குறிவைத்து வெடிக்கப்பட்ட துப்பாக்கியின் குண்டு அருகில் நின்றிருந்தவரைத் துளைத்தது. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் பதில் அளிக்கக் கடினமான பின்வரும் கேள்வியை எழுப்புகின்றன: "நீதிமான் துன்புறுவதும் துன்மார்க்கர் செழித்திருப்பதும் ஏன்?"*

*இந்தக் கேள்வியை எரேமியா கேட்டார். அவர் யூதாவின் துன்பத்தைப் பாதுகாப்பான தூரத்தில் இருந்து கவனித்துக்கொண்டிருந்த பரிவிரக்க முள்ள பார்வையாளராக இருந்ததில்லை. அவர் தேவனுடைய மக்களா யிருந்த மற்றவர்களுடன் சேர்ந்து தெய்வீக சிட்சையினால் துன்புற்றுக் கொண்டும் தேவனுடைய நியாயத்தீர்ப்பின் நீதியைப் புரிந்துகொள்ளப் போராடிக்கொண்டும் இருந்தார். ஒரு நேரத்தில் அவர் தேவனுடைய நியாயத்தீர்ப்பைப் பற்றிப் பேசுவதற்கு அவரிடத்தில் நெருங்கி, "ஆகாதவர்களின் வழி வாய்க்கிறதென்ன? துரோகஞ் செய்துவருகிற அனைவரும் சுகித்திருக்கிறதென்ன?" என்று கேட்டார் (எரே. 12:1ஆ).*

*இதே காலத்தில் இருந்த இன்னொரு தீர்க்கதரிசியான ஆபகூக் என்பவர், "... துரோகிகளை நீர் நோக்கிக்கொண்டிருக்கிறதென்ன? துன்மார்க்கன் தன்னைப்பார்க்கிலும் நீதிமானை விழுங்கும்போது நீர் மௌனமாயிருக்கிறதென்ன?" என்று வியப்புற்றார் (ஆப. 1:13ஆ). அவர், தேவன் யூதாவைத் தண்டிப்பதற்குப் பாபிலோன் போன்ற புறதெய்வ*

*வணக்கம் செய்யும் நாட்டை எவ்வாறு பயன்படுத்த முடியும் என்று புரிந்துகொள்ள முயற்சித்தார். எல்லா பதில்களையும் நாம் அறிவதில்லை என்ற உண்மையானது தேவனுடைய மகத்துவத்திற்குச் சாட்சியாக உள்ளது. நாம் அவரது வழிகளை ஒருக்காலும் புரிந்துகொள்ளாதிருக்கலாம், ஆனால் கடைசியாக ஆபகூக் கூறியதுபோல், நாம் அவரது மகா ஞானத்தை ஒப்புக்கொண்டு அவரைத் துதிக்க முடியும்:*

> *அத்திமரம் துளிர்விடாமற்போனாலும், திராட்சச்செடிகளில் பழம் உண்டாகாமற்போனாலும், ஒலிவமரத்தின் பலன் அற்றுப் போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமற்போனாலும், கிடையில் ஆட்டு மந்தைகள் முதலற்றுப்போனாலும், தொழுவத்திலே மாடு இல்லாமற்போனாலும், நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சி யாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூறுவேன். ஆண்டவராகிய கர்த்தர் என் பெலன்; அவர் என் கால்களை மான் கால்களைப்போலாக்கி, உயரமான ஸ்தலங்களில் என்னை நடக்கப் பண்ணுவார் (ஆப. 3:17-19).*

*நாம் எல்லா பதில்களையும் அறிந்திராமல் இருக்கையில், செய்கின்றவர் மீது நாம் நம்பிக்கையாயிருக்க முடியும். யூதாவின் அழிவிற்குப் பின்பு வலிவான பெருந்துன்பத்தை அனுபவித்தபோதும் கூட எரேமியா அதையே செய்தார்.*

## வெற்றிக்கு முன்பு பெருந்துன்பம் உள்ளது

*அதிகாரம் 3ல் உள்ள விவரிப்புகளும் ஒப்புவமைகளும் எரேமியாவின் பெருந்துன்பத்தை விரிவாகச் சித்தரிக்கின்றன.*

> *ஆண்டவருடைய சினத்தின் மிலாற்றினால் உண்டான சிறுமையைக் கண்ட புருஷன் நான். அவர் என்னை வெளிச்சத்திலே அல்ல, இருளிலே அழைத்து நடத்திவந்தார். அவர் தமது கையை எனக்கு விரோதமாகவே நித்தமும் திருப்பினார். என் சதையையும் என் தோலையும் முற்றலாக்கினார், என் எலும்புகளை நொறுக்கினார். அவர் எனக்கு விரோதமாகக் கொத்தளங்கட்டி, கசப்பினாலும் வருத்தத்தினாலும் என்னை வளைந்துகொண்டார். பூர்வகாலத்தில் செத்துக்கிடக்கிறவர்களைப்போல என்னை இருளான இடங்களில் கிடக்கப்பண்ணினார். நான் புறப்படக்கூடாதபடி என்னைச் சூழ வேலியடைத்தார், என் விலங்கைப் பாரமாக்கினார். நான் சத்தமிட்டுக் கூப்பிட்டாலும், என் ஜெபத்துக்கு வழியை அடைத்துப்போட்டார், வெட்டின கற்களின் சுவரால் என் வழிகளை அடைத்துப்போட்டார், என் பாதைகளைத் தாறுமாறாக்கினார். அவர் எனக்குப் பதிவிருக்கிற கரடியும், மறைவிடங்களில் தங்குகிற சிங்கமுமாயிருக்கிறார். என் வழிகளை அப்புறப்படுத்தி, என்னைத் துண்டித்துப்போட்டார், என்னைப் பாழாக்கிவிட்டார். தமது வில்லை நாணேற்றி, என்னை அம்புக்கு இலக்காக வைத்தார். தம்முடைய அம்பறாத்தூணியின் அம்புகளை என் உள்ளிந்திரியங்களில் படப்பண்ணினார். நான் என் ஜனத்தார் யாவருக்கும் பரியாசமும், நித்தம் அவர்கள் கின்னரப்*

> பாடலுமானேன். கசப்பினால் என்னை நிரப்பி, எட்டியினால் என்னை வெறிக்கச்செய்தார். அவர் பருக்கைக்கற்களால் என் பற்களை நொறுக்கி, என்னைச் சாம்பலில் புரளப்பண்ணினார். என் ஆத்துமாவைச் சமாதானத்துக்குத் தூரமாக்கினார், சுகத்தை மறந்தேன். "என் பெலனும் நான் கர்த்தருக்குக் காத்திருந்த நம்பிக்கையும் அழிந்து போயிற்று" என்றேன் (3:1-18).

பெருந்துன்பம் குணமாக்கப்படுதலுக்கு நம்மைத் தயார் செய்கிறது. "... புருஷன் நான்" என்ற கூற்றானது (வச. 1) எரேமியா யூதாவின் பெருந்துன்பத்தை விவரிக்க நன்கு தகுதியானவர் என்பதை உறுதிப் படுத்துகிறது. அவர் தம் சொந்த அனுபவத்திலிருந்து பேசினார். அவரது எழுத்துக்கள் இரண்டாம் நபரிடமிருந்து வந்த தகவல்களின் அடிப்படையில் அமைந்திருக்கவில்லை. விவரிக்கப்பட்ட பெருந்துன்பம் ஒவ்வொன்றையும் அவர் சொந்தமாக உணர்ந்திருந்தார். அவர், ஒரு மகன் தனது தந்தையின் சிட்சிக்கும் பிரம்பின் முழுவேகத்தை உணர்கின்றது போல் தேவனுடைய கோபத்தின் முழுவலிவையும் சகித்திருந்தார்.

புலம்பல் 1 மற்றும் 2 அதிகாரங்களில் எரேமியா, எருசலேம் மற்றும் யூதா ஆகியவற்றின் பெருந்துன்பத்தின்மீது கவனம் ஈர்த்திருந்தார். அதிகாரம் 3ல் அவர், தமது கவனத்தைத் தமது சொந்தப் பெருந்துன்பத்தை நோக்கித் திருப்பினார். எரேமியா தமது சொந்த வேதனையைப் பற்றிப்பேசினாரா அல்லது நாட்டின் பிரதிநிதி என்ற வகையில் தம்மை தன்மைப் பெயர் கொண்டு பேசினாரா என்பதை நாம் உறுதியாக அறிவதில்லை. நாட்டினால் அனுபவிக்கப்பட்டிருந்த துன்பமும் துக்கமும் அவருடையதாகவும் இருந்தபடியினால், அவர் தமது சொந்த அனுபவங்களின் சொற்றொடர் களில் நாட்டிற்காகப் பேச நோக்கம் கொண்டிருக்கக் கூடும்.[1] சார்லஸ் ஸ்வின்டால் அவர்கள் சுட்டிக் காண்பித்தப்படி, வலிவான துக்கம் ஏற்படும் போது நாம் இயல்பாகவே, "நம் மீதும் நமது பரிதபிக்கப்படத்தக்க நிலையின் மீதும் சற்றுக் காலம் கவனம் செலுத்துகின்றோம்."[2]

தனிப்பட்ட வேதனையைப் பற்றிய எரேமியாவின் விளக்கங்கள் யோபுவால் விவரிக்கப்பட்டவைகளினுடைய எச்சமாக உள்ளன. நாம் இந்த முழுஅதிகாரத்தின் சந்தர்ப்பப்பொருளை ஆழ்ந்து சிந்திக்காதிருந்தால், எரேமியா தம்மிடத்தில் தேவன் அநீதியாகச் செயல்பட்டதாகக் குற்றம் சாட்டினார் என்று நினைக்கக்கூடும். உண்மையில் அவர், தாமும் இஸ்ரவேல் நாட்டாரும் தேவனைத் தொழுதுகொள்வதற்கும் அவரது இடையீட்டிற்காகக் காத்திருப்பதற்குமான அவசியம் பற்றிய களம் ஒன்றை அமைப்பதற்காகவே தாம் தனிப்பட்ட முறையில் அனுபவித்ததும் நாட்டவர் அனுபவித்ததுமான பெருந்துன்பத்தை விவரித்தார். வசனம் 1 முதல் 18 வரையுள்ள துக்கம் நிறைந்த கதறுதல் நிம்மதியில்லை என்பதை விவரிக்கிறது. தேவன் தமது சொந்தக் காலத்தில் தமது மக்களை விடுவிப்பார் என்று எரேமியா அறிந்திருந்தார்; அந்த காலத்திற்கு மக்களைத் தயார் செய்வதற்கு அவர்கள் துன்பப்படுதல் அவசியமாயிருந்தது. பெருந்துன் பத்திற்கு முன்பு வரும் உதவியானது பக்குவமடைந்திருந்தது மற்றும் மலிவான உதவி என்பதே அத்தியாவசியமான கனியாகப் பிறந்திருந்தது.

மனிதர்கள் என்ற வகையில் நாம் அடிக்கடி தண்ணீரின் ஆதாரமூலத்தைக் கிணறு உலர்ந்துபோகிற வரைக்கும் மதிப்பதில்லை. தண்ணீர் கிடைப் பதற்குச் சுலபமான இன்னொரு வழி இருந்ததென்றால் நாம் அப்போதும் கூட அதை மதிப்பதற்குக் கற்றுக்கொள்வதில்லை!

வேதனையும் துன்பமும், தேவன் ஒருவர் மாத்திரமே குணமாக்குதலை அருள முடியும் என்பதைப் பொதுவாக வெளிப்படுத்துகின்றன. நமக்குத் தேவையான உதவிக்குத் தேவனிடத்தில் திரும்பும்படிக்கு நமக்குப் போதிப்பதற்காகவும் அவர் நமக்குப் பெருந்துன்பத்தை அளிக்கலாம். எரேமியா தமது நாட்டின் துன்புறுதலை விவரிப்பதற்குத் தமது சொந்த வேதனையின் தன்மையை விவரித்துக் குணமாக்குதலுக்கான காட்சியை அமைத்தார்.

*இருளானது நம்மை வெளிச்சத்திற்குத் தயார்செய்கிறது.* இந்த எழுத்தாளர் தேவன் தமக்குக் கொடுத்திருந்த சூழ்நிலையை விவரிக்க இருளைப் பயன்படுத்தினார் (வசனங்கள் 2, 6). அவர் வாழ்வின் இருளான பக்கத்தில் நடந்திருந்தார் மற்றும் பாவத்தின் அசுத்தத்தைக் காண்பதற்கும் அதன் துர்நாற்றத்தை முகர்வதற்கும் வற்புறுத்தப்பட்டிருந்தார். இது வெளிச்சம் குடியிருக்க இயலாத மூச்சுத்திணறச் செய்யும் இருளாக இருந்தது. இது நீண்டகாலமாக ஒருவர் இறந்த நிலையில் உள்ள கல்லறைக்குள் இருக்கும் இருளைப் போன்றதாக இருந்தது.

*தேவனுடைய சிட்சிக்கும் கரமானது நம்மைத் தேவனுடைய உதவும் கரத்திற்குத் தயார்செய்கிறது.* எரேமியா ஒரேநாளின் ஓட்டத்தில் அவ்வப்போது தேவனுடைய கரமானது தமக்கு எதிராகத் திரும்பியதை உணர்ந்தறிந்தார் (வச. 3). சாதாரணமாக, அவர் ஒரு சிறுகுழந்தை அபாயமான சாலையில் நடக்கிறபோது வயதுவந்த ஒருவரின் கரத்தைப் பற்றிக்கொண்டு செல்வதுபோல் தேவனுடைய கரத்தைப் பற்றிக் கொண்டிருப்பார். ஆயினும் இந்த சூழ்நிலையில், தேவன் தமது கரத்தை எரேமியாவிடமிருந்து விடுவித்துக்கொண்டதாக மட்டுமின்றி, தமது கரத்தை அவரது (எரேமியாவின்) பாதையைத் தடைசெய்வதற்கும் பயன்படுத்தியதாக எரேமியாவுக்குக் காணப்பட்டது.

யூதாவின் மற்ற மக்களைப்போலவே எரேமியாவும், எருசலேம் முற்றுகையிடப்பட்டிருந்தபோது தமது ஆண்டுகளுக்கு அப்பால் வயதான வராகியிருந்தார் (வசனங்கள் 4, 5). உணவு மற்றும் தண்ணீர்ப் பற்றாக் குறையினால் அவரது மாம்சம் சுருங்கி தோல்போல் ஆயிற்று. அவரது தோலானது முதிர் வயதான மனிதனின் தோல்போல் சுருக்கம் கண்டது. அவர் கடினமான மற்றும் களைப்புறச் செய்யும் நிகழ்வுகளால் சுற்றிச் சூழப்பட்டார்.

*தேவனுடைய பின்புறத்தைப் பார்ப்பதானது நம்மை அவரது முகத்தைப் பார்ப்பதற்குத் தயார்செய்கிறது.* வசனங்கள் 7 முதல் 9 வரை உள்ள பகுதியானது, பாபிலோனியர் எருசலேமை இரண்டு ஆண்டுகள் முற்றுகையிட்டிருந்தபோது தீர்க்கதரிசியின் பரிதாப நிலையைப் பற்றி விவரிப்பதாயிருக்கலாம் அல்லது அது ஒரு குகைக்குள் அவரது அனுபவத்தை எடுத்துரைப்பதாயிருக்கலாம். அவர் விலங்கிடப்பட்டு, வேலியிடப்பட்டு,

பெரிய அளவிலான பாறைக்கற்களால் தடுக்கப்பட்டிருந்தார். அவர் எவ்வளவுதான் கதறிக் கெஞ்சினாலும், தேவன் அதைக் கவனிக்கவில்லை என்பதுபோல் காணப்பட்டது. அவர் (தேவன்) தமது மக்களிடத்திலிருந்தும் தமது தீர்க்கதரிசியிடத்திலிருந்தும் புறம்பே திரும்பியிருந்தார்.

தேவன் அவருக்கு ஆதரவும் பலமுமாக, அவரது பிரதான உயரதிகாரியாக அவருக்குக் கட்டளையிட்டிருந்த ஒருவராகவும் இருந்தார். கீழ்ப்படிதல் என்பது கீழ்ப்படியாமையைவிட கடினமானதாக இருந்த போதிலும், எரேமியா அவருக்குக் கீழ்ப்படிய எப்போதும் முயற்சி செய்திருந்தார். தேவன் இந்த வேளையில், அவரைத் துண்டுதுண்டாகக் கிழித்து இரையாக்க விரும்பிய சிங்கம் அல்லது கரடி போல் காணப் பட்டார். அவர் ஒரு இலக்காக இருந்து தேவன் அவர்மீது அம்புகளை எய்ததுபோல் அவர் உணர்ந்தார் (வசனங்கள் 10-13).

*மற்றவர்களால் வெட்கப்படுத்தப்படுதலும் இழித்துரைக்கப்படுதலும் நம்மை தேவனுடைய வரவேற்புக்குத் தயார்செய்கிறது.* எரேமியாவின் சொந்த ஜனங்கள் அவரை இழிவுப்படுத்தி, அவரை ஏளனம் செய்வதற்குப் பாடல்களை ஏற்படுத்தினர். அவரது கசப்புணர்வானது, பலத்த நெடியுள்ள ஒருவகைத் தாவரத்திலிருந்து தயாரிக்கப்படும் கசப்பான பானமான எட்டியைக் குடித்தல் என்பதுபோல் விவரிக்கப்பட்டது. அவருடைய ஆத்துமாவின் கசப்பானது, அவருடைய வாயில் கசப்பான ருசியைப் போல் விளக்கப்படுத்தப் பட்டிருந்தது (வசனங்கள் 14, 15).

*தேவனுக்காகப் பசியாயிருத்தல் என்பது தேவனால் நிறைக்கப் படுதலுக்கு நம்மைத் தயார்செய்கிறது.* வசனங்கள் 16 முதல் 18 வரையுள்ள பகுதியானது எரேமியாவின் துன்புறுதல் பற்றிய பலத்த மற்றும் அதிகம் விரிவான விவரிப்புகளில் ஒன்றாக உள்ளது. பட்டினியாகக் கிடக்கும் மனிதர்கள் மரத்தூள், உலர்ந்த இலைகள் அல்லது மண்ணைக்கூடத் தின்பார்கள். அவர் காவற்சாலை முற்றத்தில் (இருட்டறையில்) இருந்த போது மண்ணுடன் பருக்கைக்கற்களைக் கலந்து உண்ணும் அளவுக்குப் பசியுடன் இருந்தாரா? ஒருவேளை அவர் சிறையில் தள்ளப்பட்ட போது, அவருக்கு அப்பமும் தண்ணீரும் மாத்திரம் உணவாகத் தரப்பட்டிருக்கலாம் (எரே. 37:21), அவருக்குரிய அப்பமானது சிறைச்சாலை யின் தரையில் இருந்த மண் அல்லது சேற்றின் மீது வீசப்பட்டிருக்கலாம். விஷயம் இவ்வாறு இருந்தால், அவர் தமது அப்பத்தை மண்ணுடனும் மற்ற எல்லாவற்றுடனு ம் உண்ண வேண்டியிருந்திருக்கும், அது அவரது பற்களை உடைப்பதாக அல்லது நொறுக்குவதாக இருந்திருக்கும். அவர் சாம்பல் குவியல்களினால் மூடப்பட்டோ அல்லது அதன்மீது புரளவேண்டிய தாகவோ இருந்திருக்கும், இது அவரது தாழ்மையான மற்றும் நொறுங்கிப் போன நிலையைச் சுட்டிக்காண்பித்தது.

அவருக்குச் சமாதானமோ, வளமையோ, நம்பிக்கையோ அல்லது பலமோ இருந்ததில்லை - இந்த நான்கு விஷயங்களுக்காகவும் ஒவ்வொரு வரும் ஏங்குகின்றனர் மற்றும் இவைகள் ஒவ்வொருவருக்கும் அவசியமான வைகளாய் இருக்கின்றன. இவை யாவையும் கர்த்தரால் அனுப்பப்பட்ட அழிவில் மூழ்கி அழிந்துபோயிருந்தன. நம்பிக்கையை இழந்துபோகுதல்

என்பதுதான் தாங்குவதற்குக் கடினமானதாய் இருந்தது. ஒருவர் எதிர்காலத்தில் நம்பிக்கையின் ஒளிக்கீற்று ஒன்றைக் கண்டால் மற்ற மூன்றும் இல்லாமலேயே சற்றுக்காலத்திற்கு வாழமுடியும். நம்பிக்கை என்பதே குகையின் முடிவில் வெளிச்சமாக உள்ளது. நம்பிக்கை இருந்ததென்றால், சமாதானம், வளமை மற்றும் பலம் ஆகியவை காத்திருக்க இயலும். யூதா தேசத்தின்மீது நம்பிக்கையின்மையானது மேகம்போலக் கவிந்திருந்ததை எரேமியா அனுபவத்தில் உணர்ந்தார்.

## நம்பிக்கை வெளிப்படுகிறது

எரேமியாவின் பலமும் நம்பிக்கையும் அற்றுப்போனபோது, அவர் தமது பெருந்துன்பத்தில் மூழ்கிப் போவதாகக் காணப்பட்டபோதே, நம்பிக்கையானது மேகங்களினூடே சூரிய ஒளிக்கீற்றுபோல் வெளிப் பட்டது: "எட்டியும் பிச்சுமாகிய என் சிறுமையையும் என் தவிப்பையும் நினைத்தருளும். என் ஆத்துமா அவைகளை நினைத்து நினைத்து எனக்குள் முறிந்துபோகிறது. இதை என் மனதிலே வைத்து, நம்பிக்கை கொண்டிருப் பேன்" (3:19-21).

அவர் நம்பிக்கையை எவ்வாறு கண்டார்? அவர் தேவனை நினைவு கூர்ந்தார். கர்த்தருடைய நாமத்தைக் குறிப்பிட்டது மாத்திரமே அவரது நினைவைக் கிளர்ந்தெழச் செய்தது என்பது உறுதி. அவர் தமது வழக்கை தேவனுக்கு முன்பாக எடுத்துச்சென்று, ''எட்டியும் பிச்சுமாகிய என் சிறுமையையும் என் தவிப்பையும் நினைத்தருளும். என் ஆத்துமா அவைகளை நினைத்து நினைத்து எனக்குள் முறிந்துபோகிறது'' என்று கதறினார். அவர் தமது பாதையைத் தற்காலிகமாகத் தடைசெய்திருந்த ஆழமான பெருந்துன்பத்திலும்கூட இன்னமும் தேவனை நினைவுகூர்ந்தார் மற்றும் அவருக்கு(தேவனுக்கு) முன்பாகத் தாழ வணங்கக் கூடியவராக இருந்தார்.

தேவனில் எப்போதுமே நம்பிக்கை உள்ளது. கர்த்தரை அழைத்துத் தொழுதுகொண்ட செயல் எரேமியாவுக்குள் நம்பிக்கையின் அக்கினியை மீண்டும் தூண்டிவிட்டது. நம்பிக்கை என்பது அவர், மோதியடிக்கப்பட்ட தமது கப்பல் பழுதுநீக்கப்படும் வரைக்கும் அதைக் கட்டிவைக்கப் பயன்படும் பாலந்தாங்கியைப்போல் ஆயிற்று.

---

## செய்தி என்ன?

நீங்கள் எப்போதாவது நம்பிக்கையின்மையின் உணர்வினால் துன்புற்று இருக்கின்றீர்களா? நீங்கள் நேசிக்கும் எவராவது ஒருவர் துன்புற்றதினால், உதவியற்ற நிலையின் உணர்வில் எப்போதாவது நீங்கள் மூழ்கிப்போய் இருக்கின்றீர்களா? ஒன்றுமறியாதவர்கள் துன்புறுவதில் உள்ள நியாயம் பற்றி நீங்கள் எப்போதாவது கேள்வி எழுப்பியிருக்கின்றீர்களா?

எரேமியாவின் பெருந்துன்பத்தைச் சமாளிப்பதற்கும் தொடுவானத்தில் நம்பிக்கையைக் காண்பதற்கும் அவருக்கு உதவும்படியான இரண்டு

நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டார். முதலாவது அவர் துக்கத்தை வெளியிட்டார். முனைவர் பில் ஃபிளாட் அவர்கள், துக்கத்தை வெற்றி கொள்வதற்குப் பத்து படிநிலைகளை வரைக்குறிப்பிட்டார். இந்தப் பட்டியலில், துக்கத்தைப் பற்றிப் பேசுதலும் அதை வெளிப்படுத்துதலும் உள்ளடங்கியிருக்கிறது.[3] அதிகாரம் 3ன் முதல் பதினெட்டு வசனங்களில் எரேமியா தமது துக்கத்தை வெளிப்படுத்தினார். நமது உணர்வு எவ்வாறு உள்ளது என்பதை ஒரு நண்பரிடமோ அல்லது நம்மை ஆற்றப் படுத்துபவரிடமோ பேசுவதன்மூலம் வெளிப்படுத்துதல் என்பது வெறுப் புணர்வையும் கசப்புணர்வையும் வெளியேற்றுவதற்கு நம்மை அனு மதிக்கிறது. அது வெளியேறிவிட்டால், நாம் தொலைதூரத் தொடு வானத்தில் நிம்மதியின் சூரியனைக் காணத்தொடங்குவோம்.

யாராவது ஒருவர் துன்புறும் காலத்தில் அவருக்கு உதவிசெய்ய நீங்கள் முயற்சித்துக்கொண்டிருந்தால், (அவர் கூறுவதைக்) கவனித்துக் கேட்குதல் என்பதே நீங்கள் செய்யக்கூடிய மிகச்சிறந்த விஷயமாயிருக்கும். அவர் தமது உணர்வுகளை வெளிப்படுத்த அனுமதியுங்கள். அனுதாபத்தை வெளியிடு தல், அவர் மீது நீங்கள் கொண்டுள்ள அன்பையும் அக்கறையையும் காண்பித்தல் ஆகியவற்றைத் தவிர வேறு எதையும் கூறுதல் பெரும்பாலும் அவசியமற்றதாக உள்ளது.

இரண்டாவதாக, எரேமியா தமது பெருந்துன்பத்தைத் தேவனிடம் எடுத்துச் சென்றார். அவர், தேவன் எப்போதுமே இருக்கின்றார் என்பதை நினைவுகூர்ந்தார். நம்மில் சிலர் மாத்திரமே புரிந்து கொள்வதாகக் காணப் படுகின்றபடியால், துன்புறுதல் என்பது தனிமையானதாக உள்ளது. நம்மைப் புரிந்து கொள்பவர் ஒருவர் நமக்கு இருக்கின்றார். அவர், எந்த ஒரு நபரும் அனுபவிக்கக் கூடிய பெருந்துன்பத்தையும் தனிமையையும் அனு பவித்திருக்கின்றார். “ஆதலால், அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடு பட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்ல வராயிருக்கிறார்” (எபி. 2:18). எபிரேயர் 4:16 வசனமானது, “ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்” என்று நம்மை அழைக்கிறது.

உடல்ரீதியான வாழ்வைக் காட்டிலும் நித்தியமான ஆத்துமாவைப் பற்றி தேவன் அதிகம் அக்கறை உள்ளவராக இருக்கின்றார். துன்புறுதல் பற்றிய அவரது ஆலோசனையானது அவரது வசனத்தில் தரப்பட்டுள்ளது:

> என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப் படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது (யாக். 1:2-4).

சோதனை, பரீட்சை மற்றும் துன்புறுதல் ஆகியவை, நம்மைப் பூரணப் படுத்தி முழுமைப்படுத்துகிற நித்திய மதிப்புமிக்க சில விஷயங்களை

*உண்டாக்குகின்றன. ஒருவேளை இது, தேவனுக்கு முன்பாகப் பூரண ராகவும் முழுமையானவராகவும் நிலைநிறுத்துவதற்குக் கிறிஸ்து பட்ட பாடுகளை நாம் அடையாளம் காண நமக்கு உதவலாம். நாம் கிறிஸ்தவர்கள் என்ற வகையில் அவரது பாடுகளில் பங்கேற்க வேண்டியதாக உள்ளது.*

*குற்றம் ஒன்றும் அறியாதவர்களின் பாடுகள்கூட பயனற்றுப் போவதில்லை, இந்தப் பயன்கள் நம்மால் காணமுடியாதவைகளாகக் கூட இருக்கலாம். நமது சொந்தத் தவறுகளினால் உண்டானவைகள் தவிர மற்ற ஒவ்வொரு வேதனையில் இருந்தும் நாம் பாதுகாக்கப்பட்டு கவசமிடப் பட்டிருந்தால் வாழ்வின் சோதனைகளை எதிர்கொள்ள நாம் தயாராய் இருக்கமாட்டோம். துன்புறுதல் என்பது நம்மை உறுதிப்படுத்தி, நம்மைத் தயார்செய்து, வாழ்வின் அடுத்த போராட்டத்திற்கு நம்மை ஆயத்த மாக்குகிறது.*

*தேவன் கட்டுப்பாடு செலுத்துகின்றார், மற்றும் அவர் செய்வது இன்னதென்று அறிந்துள்ளார். தேவன் எவ்வளவாகப் பராமரிக்கின்றார் என்பதை அறிந்த ஒருவர், "ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள். அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்" என்று கூறினார் (1 பேது. 5:6, 7). நாம் துன்புறுகின்றபோது சாய்ந்துகொள்ள யாரேனும் ஒருவர் தேவை என்பதைவிட அதிகமாக நாம் ஏன் துன்புறுகின்றோம் என்பதை அறியத் தேவையில்லை.*

---

*குறிப்புகள்*

[1]James E. Smith, *Jeremiah and Lamentations,* Bible Study Text Book Series (Joplin, Mo.: College Press, 1974), 879. [2]Charles R. Swindoll, *The Lamentations of Jeremiah* (Waco, Tex.: Insight for Living, 1986), 27. [3]Bill W. Flatt, *From Worry to Happiness* (Nashville: Christian Communications, 1979), 80-82.